<u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**ஸ்ரீ சார்வரி வருடம் சித்திரை மாதம் 17–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு ஏப்ரல் 30ம் தேதி) வியாழக் கிழமை காலை 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சுப்பையா,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**<u>பொருள் எண்..1</u>**

இவ்வலுவலக அனைத்து பிரிவு அலுவலகப் பயன்பாட்டிற்கும் 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள் **(Stationery)** கணினி பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் மற்றும் பணமதிப்புடைய படிவங்கள் துறை மூலம் வசூல் செய்யப்படும் டோக்கன்கள் அம்மா உணவக டோக்கன்கள் வாங்கிக் கொள்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.15,00,000/–க்கு (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மேற்கண்ட பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மற்றும் அரசு சார்பு கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்..1329/2020/பி2)

**தீர்மானஎண்.. 441 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..2</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்..7366/2016/ யுபிஏ–2, நாள்.. 03.09.2018 கடிதத்தின்படி, பட்டுக்கோட்டை நகராட்சி சாலையோர தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை வரைவு துணை விதிகள்–2019 தயார் செய்யப்பட்டு பட்டுக்கோட்டை நகர்மன்றம் தீர்மானம் எண்..405, நாள்.. 14.02. 2020–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி வரைவு துணை விதிகள் பட்டுக்கோட்டை நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் அலுவலக நாட்களில் பார்வையிட்டு ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்கள் இருப்பின் 15 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டு பொது மக்கள் அறியும்வண்ணம் தினபூமி தினசரி நாளிதழில் 03.03.2020–ம் தேதி விளம்பரம் செய்த வகையில் விளம்பர செலவினத் தொகை ரூ.3,948/–ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்..7737/2015/எப்1)

**தீர்மானஎண்.. 442 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..3</u>**

நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..15, நாள்.. 29.1.2016ன்படி இந்நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 20 வார்டுகளில் மட்டும் அன்றாட துப்புரவுப்பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக்குழுக்களான பாரதம் சுய உதவிக்குழு, சமுத்திரம் சுய உதவிக்குழு, டாக்டர் அம்பேத்கார் சுய உதவிக்குழு, தூய்மை இந்தியா சுய உதவிக்குழு மற்றும் சுதந்திரம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 94 நபர்கள் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொண்டதன் உரிம காலம் 31.1.2017 உடன் முடிவடைந்ததன் பொருட்டு நகர் மன்றம் தீர்மானம் எண்..9, நாள்..31.1.2017ன்படி மேலும் ஒராண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 31.1.2018 உடன் முடிவடைவதாலும், மேற்படி 5 சுய உதவிக்குழுக்கள் தங்களது உரிம காலத்தை அதே ஊதிய விகிதத்தின்படி மேலும் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கடிதத்தின் வழியே தெரிவித்துள்ளனர். தற்பொழுது தூய்மை இந்தியா திட்ட பணிகள் நகரின் விரிவாக்க பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் போன்றவற்றிற்காக பணியாளர்களின் தேவை நிமித்தம் காரணமாக இரண்டு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக மேற்படி தனியார் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..322, நாள்..31.1.18ன்படி
அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.5.2018 உடன் முடிவடைவதால் அன்றாட பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி 1.6.2018 முதல் 31.7.2018 வரை கூடுதலாக இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றத் தீர்மான எண்..430, நாள்.. 29.5.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக் காலம் 31.7.2018உடன் முடிவடையும் பொருட்டு பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.8.2018 முதல் 30.09.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் உரிம காலம் 30.9.2018 உடன் முடிவடைவதன்பொருட்டு மேலும் கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.10.2018 முதல் 30.11.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண்..502, நாள்.. 20.9.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 30.11.2018 உடன் முடிவடைய உள்ளதன் பொருட்டு கூடுதலாக 2 மாதத்திற்கு 1.12.2018 முதல் 31.01.2019 வரை அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்..560, நாள்.30.11.2018ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.1.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு கூடுதலாக 5 மாதத்திற்கு 1.4.2019 முதல் 31.8.2019வரை மட்டும் உரிமத்தினை நீட்டிப்பு செய்தும், அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்.73, நாள்.31.05.2019ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.8.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மான எண்.312, நாள்.13.11.2019ன்படி கூடுதலாக 4 மாதத்திற்கு 01.09.2019 முதல் 31.12.2019வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.12.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மான எண்.419, நாள்..25.02.2020–ன்படி கூடுதலாக 4 மாதத்திற்கு 01.01.2020 முதல் 30.04.2020வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.04.2020உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, பொது சுகாதாரப்பணியின் அத்தியாவசியம் கருதி மேலும் 01.05.2020 முதல் 30.06.2020வரை 2 மாதத்திற்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்தும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.45.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) தனியார் சுய உதவிக்குழுக்களின் உரிம காலம் முடிவடைந்ததன் பொருட்டும், பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி மேலும் 01.05.2020 முதல் 30.06.2020 வரை 2 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்திடவும், 2020–2021 –க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | 3) அன்றாட பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| | 4) உத்தேச செலவு தொகை ரூ.30.00 லட்சத்திற்கு பொது நிதி மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7150/2015/எச்1) |

**தீர்மானஎண்.. 443 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>**பொருள் எண்..4**</u>

பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கணினி வரிவசூல் மற்றும் சேவைமையத்தில் பொதுமக்கள் அதிக அளவில் கூடுவதால் மற்றும் கணினி நுண்பொருள்கள் அதிகஅளவில் பயன்படுத்துவதாலும் இவ்வசூல் மையத்தில் 2 குளிர்சாதன இயந்திரங்களும், ஆணையர் குடியிருப்பு மற்றும் பொறியாளர் அறை ஆகியவற்றில் தலா 1 குளிர்சாதன இயந்திரங்களும் (1.5 Ton capacity) , அம்மா உணவகம் உணவு அருந்தும் இடத்தில் மின்விசிறி மற்றும் டியூப்லைட் வசதிகளை ஏற்படுத்திடவும் தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.2,50,000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.கஎண்.1247 /2020/இ1) |

**தீர்மானஎண்.. 444 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

<u>**பொருள் எண்..5**</u>

கொரோனா (Covid-19) தொற்று நோய் பரவலை தடுத்திடும் விதமாக அரசு ஆணை (பல்வகை) எண்..193, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை (பேமே 11 துறை). நாள்..15.04.2020ல் இணைப்பு I,II & III-ல் அறிவித்துள்ளபடியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 298 மற்றும் 308ன்படியும் மற்றும் தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939 பிரிவு 62—74, பிரிவு 81 மற்றும் 129ன்படியும் வீட்டிற்கு ஒருவர் மட்டும் (15—60 வயதுக்குட்பட்டவர்கள்) வீட்டை விட்டு வெளியில் வந்து அத்தியாவசிய பொருட்கள் வாங்கிக்கொள்ளலாம். அவ்வாறு வெளியில் வரும்போது கீழ்க்காணும் நிபந்தனைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| 1. | அரசு அனுமதி வழங்கியுள்ள நேரங்களில் மட்டுமே வெளியே வரவேண்டும். |
| 2. | மருத்துவ அவசர சிகிச்சை மற்றும் மருந்தகத்திற்கு செல்வதற்கு விதிவிலக்கு அளிக்கப்படும். |
| 3. | வீட்டில் 15 முதல் 60 வயதுக்குட்பட்ட ஒருவர் மட்டுமே வீட்டை விட்டு வெளியே வர அனுமதி அளிக்கப்படுவர். |
| 4. | நடந்து செல்லும்போதும், வாகனத்தில் செல்லும்போதும், வாகனம் நிறுத்தும் இடத்திலும் பொருட்கள் வாங்கும்போதும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். |
| 5. | கடைகள், தொழில் நிறுவனங்களின் பணியாளர்கள் முக கவசம் அணிந்திருக்க வேண்டும். கைகளை சுத்தம் செய்ய கிருமி நாசினியுடன் வசதி இருத்தல் வேண்டும். சமூக இடைவெளி பின்பற்றி உரிய அமைப்பு ஏற்படுத்த வேண்டும். முககவசம் அணியாமல் வருபவர்களுக்க பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது. |

நிபந்தனைகளை கடைபிடிக்காமல் ஊரடங்கு நேரங்களில் வெளியில் பொது இடங்களில் சுற்றினாலும் அந்த நபர் கொரோனா தொற்று பரவலுக்கு காரணமானவர் எனக்கருதி மேற்படி சட்டங்களின்படி முதல் முறை ரூ.100/—ம் இரண்டாவது முறை ரூ.500/—ம் மூன்றாவது முறை ரூ.1000/—ம் அபராதம் விதிக்கலாம். நான்காவது முறை பூட்டி சீல் வைக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக **குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 445... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..6</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக தேவையான மாஸ்க் 5000 எண்ணம், முழு கவச உடை 50 எண்ணம் விலைப்புள்ளி பெற்று ரூ.98,858/- மதிப்பீட்டில் ரிலையன்ட் குளோபல் கிரீன், கோயம்புத்தூர், நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமை மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 446 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..7</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்கு தேவையான கிருமி நாசினி பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் ஆகியவற்றை ரூ.5,14,000/- மதிப்பீட்டில் நகராட்சி ஒப்பந்தாரர் ஐயப்பா டிரேடர்ஸ், பட்டுக்கோட்டை நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 447 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..8</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக தேவையான சானிடைசர், ஒரு முறை பயன்படுத்தும் கிளவுஸ் விலைப்புள்ளி பெற்று ரூ.19,000/- மதிப்பீட்டில் Hyge, திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 448 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..9</u>**

மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர், அவர்களின் அறிவுரையின் படி பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக பொதுமக்கள் வெளியில் அதிகளவில் கூடுவதை தவிர்க்க வாரம் 2 நாள் மட்டுமே வெளியே வர அனுமதி சீட்டு விலைப்புள்ளி பெற்று ரூ.41,216/- மதிப்பீட்டில் கே.ஆர். பிரிண்டர்ஸ், தஞ்சாவூர் நிறுவனம் மூலம் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் பணிகள் மேற்கொண்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 449 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..10</u>**

மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர், அவர்களின் அறிவுரையின் படி பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக இப்பணியில் ஈடுபடும் தன்னார்வலர்களுக்கு கொரோனா தடுப்பு படை டிசர்ட் ரூ.18,000/- மதிப்பீட்டில் சீமாட்டி சில்க்ஸ், கும்பகோணம் அவர்களிடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 450 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..11</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்காக தேவைப்படும் கிளவுஸ், முகவுறை, லைசால், சோடியம் ஹைப்போ குளோரைட், சோப் சொலுசன், பிபிஇ கிட், பிளிச்சிங் பவுடர் ஆகியவற்றை விலைப்புள்ளி பெற்று ரூ.14,61,219/- மதிப்பீட்டில் தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்கோ சர்வ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 451 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**<u>பொருள் எண்..12</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர் தஞ்சாவூர், அவர்களின் அறிவுரையின்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்காக வீடுகளில் சர்வே செய்யும் படிவம், பொதுமக்கள் அறியும் வண்ணம் மல்டி கலர் நோட்டீஸ் விலைப்புள்ளி பெற்று ரூ.52,600/– மதிப்பீட்டில் வாசன் ஆப்செட் பிரிண்டர்ஸ், பட்டுக்கோட்டை அவர்களிடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 452 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**<u>பொருள் எண்..13</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்காக தேவையான சானிடைசர் விலைப்புள்ளி பெற்று ரூ.12,000/- Hyge திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 453 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**<u>பொருள் எண்..14</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கொரோனா நோய் பற்றி பொதுமக்கள் நன்கு அறியும் வண்ணம் நகர் பகுதி முழுவதும் ஆட்டோ விளம்பரம் செய்யும் பணி 18.03.2020 முதல் 27.03.2020 முடிய பத்து தினங்களுக்கு எம்.எஸ். ராகம் அட்வடைசிங், பெரிய தெரு பட்டுக்கோட்டை

நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று ரூ.25000/- மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 454 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..15</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர் தஞ்சாவூர், அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணியில் ரேசன் கடை தன்னார்வலர்கள் பற்றி பொதுமக்கள் அறியும் வண்ணம் அந்தந்த கடைவாரியாக ரேசன் கடை படிவம் (21x950) எண்ணிக்கை விலைப்புள்ளி பெற்று ரூ.19,950/- மதிப்பீட்டில் வாசன் ஆப்செட் பிரிண்டர்ஸ், பட்டுக்கோட்டை நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 455 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..16</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் முகவுறை, கையுறை, கிருமி நாசினிகள் லைசால், சோடியம் ஹைப்போ குளோரைட், ஆகியவற்றை விலைப்புள்ளி பெற்று ரூ.2,52,335/- மதிப்பீட்டில் தமிழ்நாடு மல்டி பர்போஸ் இன்கோ சர்வ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 456 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..17</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வண்ண அடையாள அட்டையினை பயன்படுத்துவது தொடர்பாக விழிப்புணர்வு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வதற்கு 13.04.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | நாள் ஒன்றிற்கு |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வண்ண அடையாள அட்டையினை பயன்படுத்துவது தொடர்பாக விழிப்புணர்வு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல் | ரூ.15,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 2500/– |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 2550/– |
| | | | இசைக்குயில் பட்டுக்கோட்டை | 2600/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது கே.எடிசன், ஒப்பந்ததாரர், மற்றும் இசைக்குயில் பட்டுக்கோட்டை நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியைவிட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1)வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) செலவினத்தை கொரோனா நிதியினி கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1400/2019/இ.1) |

**தீர்மானஎண்.. 457 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**<u>பொருள் எண்..18</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கைகழுவும் வகையில் 12 இடங்களில் HDPE டேங்க் மூலம் அமைத்தல் பேனரில் வாசகம் அமைத்திடும் பணிக்கு 17.04.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கைகழுவும் வகையில் 12 இடங்களில் HDPE டேங்க் மூலம் அமைத்தல் பேனரில் வாசகம் அமைத்திடும் பணி | ரூ.2,00,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.08 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 3.87 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது கே.எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1)வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) செலவினத்தை கொரோனா நிதியினி கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..1399/2019/இ1) |

**தீர்மானஎண்.. 458 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**ஒம்/கா.சுப்பையா**

**ஆணையர் / தனிஅலுவலர்**
**பட்டுக்கோட்டை நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையர்**
**பட்டுக்கோட்டை நகராட்சி**